# <u>அதிசயமானவர்......</u>

Praise the Lord:

**<u>ஏசாயா 9:6</u>** (பக்கம் 815)

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; **அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.**

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத **அதிசயமான** காரியம் ஒன்றுண்டோ? (எரேமியா 32:27)

இந்த உலகத்திலே எவ்வளவோ அதிசயங்கள் எவ்வளவோ வழிகளிலே நடைபெறுகின்றன.
மனிதன் செய்யும் அதிசயங்கள் நமக்கு வியப்பை உண்டாக்குவது இயல்புதான்...
<u>அந்த மனிதனையும் படைத்த இறைவன்</u>, செய்யக்கூடாத **அதிசயம்** ஒன்றுமில்லை. அதுமட்டுமல்ல.
**அதிசயமான ஆலோசனைகளும்** வேதத்தின் மூலமாக நமக்கு கொடுத்திருக்கிறார்.
அவருடைய ஆலோசனைகளை நாம் கேட்டு, அதன்படி நடக்க, அவரே
நமக்கு உதவும் **வல்லமையுடைய தேவன்.**
ஆலோசனையில் ஆச்சரியமானவரும், செயலிலே மகத்துவமானவர் என்று வேதம் சொல்கிறது.
உலகத்திலுள்ளவர்கள் போல் அல்ல, அவர் சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கும் **நித்தியபிதா.**
உலகம் கொடுக்கிறபிரகாரமான சமாதானம் அல்ல,
உலகம் கொடுக்கமுடியாத, அவருடைய சமாதானத்தையே நமக்கு கொடுத்து,
இம்மையிலும் மறுமையிலும் நாம் அவரோடு வாழ வழிவகுத்த **சமாதானப்பிரபு.**

இப்படி சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும்,
**கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.** (1 கொரிந்தியர் 1:31)

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்று. (ரோமர் 8:2)
இந்த ஈடு இணையில்லாத மீட்பைப் பெற்றுக்கொள்ள, வேதத்தை வாசிக்கவும் தியானிக்கவும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். நன்றி. கடவுள் ஆசீர்வதிப்பாராக.

அன்புடனும் ஜெபத்துடனும்,